# பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை (A -2026)

*Acts 2, 42-47; 1 Pet 1,3-9; Jn 20,19-31*

## திருப்பலி முன்னுரை

இன்றைய தினம் நாம் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை கொண்டாடுகிறோம்.

இந்த நாள் " தெய்வீக இரக்கத் திருநாள்" என்றும் அழைக்கப்படுகிறது.
எல்லா மனிதர்களுக்கும் இறைவன் அளிக்கும் அளவற்ற இரக்கத்தைக் கொண்டாடும் மகிழ்ச்சியான நாள் இது.

மேலும் சில நாடுகளில், இன்றைய நாள் குழந்தைகள் முதன்முறையாக இயேசுவின் பரிசுத்த இரத்தத்தையும் உடலையும் வாயில் உற்கொண்டு இதயத்தில் ஏற்றுக்கொள்ளும் "முதல் திருவுணவு" (First Holy Communion) திருநாளாகவும் அனுசரிக்கப்படுகிறது.

ஒரு சிறிய சம்பவத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்: பல ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு, ஒரு செய்தியாளர் ஒரு மீட்பு பணியாளரிடம், "அந்த இடத்தில் அதிகமான மக்களின் உயிர்களை காப்பாற்றியது என்ன?" என்று கேட்டார். அவர் தொழில்நுட்பம், இயந்திரங்கள் அல்லது திட்டமிடல் பற்றி சொல்லவில்லை. அவர் சொன்னது மிகவும் எளிமையானது

"ஒருங்கிணைந்து கட்டப்பட்ட ( continuously constructed building areas) கட்டிடங்கள் தான்". நிலைத்திருந்தன.

எல்லா பகுதியும் ஒன்றோடொன்று இணைந்திருந்த இடங்களில் கட்டிடம் இடிந்து

விழவில்லை. மாறாக ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாக இருந்த இடங்களில் கட்டிடங்கள் இடிந்து விழவில்லை"

இந்த சம்பவம் நமக்கு ஒரு முக்கியமான உண்மையை நினைவுபடுத்துகிறது. ஒற்றுமை இணைப்பு, பரஸ்பர ஆதரவு இவைகள்தான் ஒரு சமூகத்தை வலிமையாக்குகின்றன. ஒரு கட்டிடத்தின் தூண்கள் ஒன்றோடொன்று ஏதாவது ஒரு வகையில் இணைக்கப்பட்டிருந்தால் அந்த கட்டிடம் நிலைத்திருக்கிறது.

அதுபோல, நமது பங்கு, நமது குடும்பங்கள், நமது திருச்சபை இவை அனைத்தும் நம்பிக்கை, ஒற்றுமை ,அன்பு, இரக்கம் ஆகியவற்றால் ஒன்றிணைந்தால் மட்டுமே திருச்சபை நிலைத்து நிற்க இயலும்.

அப்போஸ்தலர் பணிகள் நூலில் நாம் வாசிப்பது போல, முதல் கிறிஸ்தவர்கள் "ஒரே மனமும் ஒரே உள்ளமும் கொண்டவர்களாக" வாழ்ந்தனர். அவர்கள் ஒன்றாக ஜெபித்தனர், ஒன்றாக அப்பத்தை பிட்டு தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். யாருக்கும் குறை இல்லை; ஆண்டவர் தினமும் புதிய சீடர்களை அவர்களுடன் சேர்த்தார்.
இன்றும் நாம் அதே ஒன்றுமை , தாழ்மை, அன்பு ஆகிய மனப்பான்மையுடன் கூடிவருவோம் கடவுளின் இரக்கத்தை புதியதாக பெற தயாராக இருப்போம்

இத் திருப்பலியை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு முன், நாம் அனைவரும் கடவுளின் இரக்கத்திற்கு அருகதை உள்ளவர்களா ?என்பதை உணர்ந்து, இறை இயேசுவை உட்கொள்ள நம்மை முழு மனதுடன் தயார் படுத்திக் கொள்வோம்.

## மறையுறை

“ஒன்றாக  இணைக்கப்பட்ட தூண்கள் அமைதிக்கும் காயங்களுக்குமான இயேசுவின் உயிர்ப்பினால் கிடைக்கப் பெற்ற ஒன்றுபட்ட இணைப்பு “

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு பெரிய நிலநடுக்கம் நடந்தபோது, ஒரு செய்தியாளர் ஒரு மீட்பு பணியாளரிடம் கேட்டார்:

“எந்தவிதமான கட்டிடங்கள் அதிகமான உயிர்களை காப்பாற்றின?”

அவர் சொன்ன பதில் மிகவும் சிந்திக்க வைக்க கூடிய விதமாக இருந்தது

“தூண்கள் ஒன்றோடு ஒன்று ஏதாவது ஒரு வகையில் இணைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள்தான் நிலைத்தன. எல்லாம் ஒன்றாக இணைந்திருந்த இடங்கள் தப்பின. ஒவ்வொன்றும் தனித்தனியாக இணைக்கப்படாமல் இருந்த கட்டிடங்கள் இடிந்துவிட்டன.”

இந்த செய்தி நமக்கு ஒரு உண்மையை சொல்கிறது

“ஒன்றுபட்டவை நிலைக்கும்.”

இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு திருச்சபையும் இப்படித்தான் இருந்தது.

அப்போஸ்தலர் பணிகள் நூல் இவ்வாறு கூறுகிறது

“அவர்கள் ஒரே மனமும் ஒரே ஆன்மாவுமாக இருந்தனர்.”

அவர்கள்:

ஒன்றாக ஜெபித்தார்கள்

ஒன்றாக உணவு உண்டார்கள்

ஒருவருக்கொருவர் உதவினார்கள்

யாருக்கும் குறை இல்லை.

மக்கள் தினமும் ஒன்று கூடினார்கள்

அவர்கள் எப்படி உலக மக்களை மாற்றினார்கள்?

மாற்றத்திற்கான காரனம்

திட்டமிடல் இல்லை

பணம் இல்லை

அதிகாரம் இல்லை

ஆனால் இருந்தது: “ஒருமைப்பாடு”

மக்கள் பார்த்து வியந்தவை

சமாதானம்

மன்னிப்பு

செல்வந்தரும் ஏழையும் ஒரே மேசையில் உணவு உட்கொண்டது

விளக்க முடியாத சந்தோஷம்

ஒரு நல்ல வார்த்தை உள்ளது அது

“ ஒரே நல்லிணக்கம்”(Harmony)

ஒரே நல்லிணக்கம் என்றால்

ஒரே மாதிரி இருப்பது அல்ல.

ஒரு இசைக்குழு போல:

வயலின் இனிமை

டிரம்பெட் வலிமை

டிரம் ஒலி சில நேரம் மிகுந்த சத்தத்தை எழுப்பும்

ஆனால் எல்லாம் இணைந்து அழகான இசையை அனுபவிக்கலாம்.

நம்முடைய பங்கு திருத்தலம் கூட அப்படித்தான்: ஒரே மாதிரி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்

ஒரு கிராமத்தின் பங்குத்தளத்தில் எப்போதும் சண்டை நடந்து கொண்டே இருக்கும்

பெரியவர்கள் vs இளைஞர்கள்

பாரம்பரியம் vs நவீனமயம்

நிதிக்குழு vs பாடற்குழு.

ஒரு மூதாட்டி எழுந்து சொன்னார்:

“ நாம் நமக்குப் பிடித்த பாடலை வாசிக்க நாம் அழைக்கப்படவில்லை; மாறாக அமைதி / சமாதானம் என்ற ஒரே பாடலை வாசிக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

அந்த மூதாட்டியின் குரல் எல்லாவற்றையும் மாற்றியது.

ஆனால்…

புனித வெள்ளிக்கிழமை அன்று எல்லாம் மாறியது

பேதுரு மறுதலித்தார்

மற்ற சீடர்களும் ஓடிவிட்டார்கள்

அவர்கள் பயந்தார்கள்.

அவர்கள் தங்களைப் பற்றி வெட்கப்பட்டு அமைதியாகி விட்டார்கள்

உயிர்ப்பின் மாலை…

வேளையில்

அவர்கள் கதவுகளை பூட்டிக்கொண்டார்கள்

அப்பொழுது இயேசு அங்கு தோன்றினார்

அவர் கூரிய வார்த்தை

“உங்களுக்கு சமாதானம் உண்டாகுக.”

அவர் சீடர்களின் செயலுக்காக கண்டனம் தெரிவிக்கவில்லை

குற்றம் சாட்டவில்லை.

மாறாக  சமாதானம் மட்டுமே  வழங்கினார் .

அவர் தனது கைகளைவும் விலாவையும் காட்டினார்.

காயங்கள் இன்னும் தென்பட்டன தெளிவாக

உயிர்த்தெழுதல் என்றால்:

காயங்கள் எல்லாம் மறைந்து போவது இல்லை

காயங்கள் மாற்றப்பட்டு அழகாகிறது

ஜப்பான் நாட்டில் “கின்சுகி” என்ற கலை உள்ளது:

உடைந்த பாத்திரத்தை தங்கத்தகடுகளால் ஒட்டுகிறார்கள்.

உடைந்தது மறைக்கப்படாமல் அது அழகாக மாற்றப்படுகிறது

அப்படித்தான் நம்முடைய வாழ்க்கையும்.

அருகருகே வசித்து வந்த இரண்டு குடும்பங்கள் சொத்து பிரச்சனையில் 20 வருடங்கள் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தனர்

இறுதியில் ஒரு இறுதி அஞ்சலி திருப்பலியில் அருகருகே அமர்ந்து

திருப்பலியில் பங்கேற்றார்கள்

“சமாதானம் உண்டாகுக” என்ற போது:

மெதுவாக திரும்பினார்கள்

சமாதானம் கூறிக் கொண்டார்கள்

கண்ணீர் சிந்தப்பட்டது

மீண்டும் உறவு மலர்ந்தது

ஒருவருக்கொருவர் சமாதானம் சொல்லிக் கொள்ள வேண்டும்

மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ள வேண்டும்.

தோமையார் இயேசு வந்த அந்த நாள் அங்கு இல்லாமல் இருந்தார்.

அவர் ஒரு சந்தேகப் பேர்வழி என்று பேசப் சொல்லப்படுகிறார்.

ஆனால் உண்மையில் அவர் மிகவும் காயமடைந்தவர்.

“ நான் பார்க்காமல் நம்பமாட்டேன்” என்றார்.

ஒரு சிறுவன் தன் தாத்தாவுடன் கடலை பார்க்க சென்றான் ஆனால் அவன்

“நான் தண்ணீரைதான் பார்க்கிறேன் கடலை பார்க்கவில்லை” என்றான்.

தாத்தா சொன்னார்:

“நீ கடலை பார்க்காததாலே கடல் இல்லை என்று அர்த்தமில்லை.”

தோமையார் செய்த பெரிய தவறு:

சந்தேகம் கொண்டது இல்லை

மாறாக அனைவரும் கூடி இருந்த கூட்டத்தில் அவர் இல்லாதது

வாழ்க்கையில் நம்பிக்கை என்பது:

தனியாக வாழ்வது அல்ல மாறாக ஒன்றாக வாழ்வது

ஒரு மருத்துவர் ஒரு காயமடைந்த போர் வீரரிடம் சொன்னார்:

உன் காயத்தை நான் எடுத்துக்கொண்டு அனுபவிக்க முடியாது. ஆனால் அதை பார்க்க நான் பயப்படவில்லை."

அது குணமடைவதின் தொடக்கம்.

இயேசுவும் அதையே செய்கிறார்:

உன் கையை வைத்து என் காயங்களை பார் "

நாம் பல காயங்களை மறைக்கிறோம்:

- குற்ற உணர்வு
- கோபம்
- துக்கம்

அவைகளை மறைப்பதால் அவை குணமடையாது

பேதுரு அழுதபின் தான்

நான் உன்னை நேசிக்கிறேன்" என்றார்

இயேசு அதன்பின் தோமையார் சொன்னார்:

" என் ஆண்டவரே  என் தேவனே

நம்பிக்கையும் சந்தேக குணமும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்

நாமும் அப்படித்தான்:

- நாம் உயிர்ப்பின் மக்கள்

ஆனால் இன்னும் சிலுவை சுமக்கும் மக்கள்

ஒரு மனிதர் தனது மனைவியை இழந்தார்.

அவருக்கு இயேசுவின் உயிர்ப்பு விழாவில சந்தோஷம் இல்லை.

அருகிலிருந்தவர் ஒரு மெழுகுவர்த்தியை அவர் கையில் வைத்தார்.

வைத்தபின் வைத்தவர் நீ ஒற்றையாக இல்லை" என்றார்.

அது தான் உயிர்ப்பின் உண்மையான மகிழ்ச்சி

அதுதான் திருச்சபை நமக்கு அறிவுறுத்துகிறது

நாம் ஒன்றாக இருக்க வேண்டும்

நாம் சமாதானமாக இருக்க வேண்டும்

நம் காயங்களை வெளிப்படுத்த வேண்டும்

ஒரு இசைக்கலைஞர் சொன்னார்:

ஒவ்வொருவரும் அளவுக்கு அதிகமாக இசையை இரசிக்கும்போதுதான் நல்ல இசை உருவாகும்"

நாமும்:

- கிறிஸ்துவின் குரலைக் கேட்போம்
- மற்றவர்களின் காயங்கள் மற்றும் துன்பங்களை கேட்போம்
- நம்முடைய சந்தேக குணங்களை இயேசு என்ற ஒளியின் முன் கொண்டு வருவோம்

நாம் ஒன்றாக இருக்கும்போது

இயேசு நமக்குள் சமாதானத்தை கொடுப்பார்

அதனால் நம்முடைய:

குடும்பம், பங்குத்தளம், வாழ்க்கைத்தரம் ஆகியவை நிலைத்து நிற்கும்.

கிறிஸ்தவர்கள் அல்லாத மற்ற மக்கள் சொல்லுவார்கள்:

" இவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள்"

அப்போது நாமும் தோமையாரைப் போல சொல்ல முடியும்: " என் ஆண்டவரே என் தேவனே". ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai